ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ உருப்பிணிநங்கை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உருப்பிணிநங்கை ॥

## திருமாலிருஞ்சோலையின் மாட்சி

‡உருப்பிணி நங்கை தன்னை மீட்பான்⋆ தொடர்ந்தோடிச் சென்ற⋆
உருப்பனை ஓட்டிக் கொண்டிட்டு⋆ உறைத்திட்ட உறைப்பன் மலை⋆
பொருப்பிடைக் கொன்றை நின்று⋆ முறி யாழியும் காசும் கொண்டு⋆
விருப்பொடு பொன் வழங்கும்⋆ வியன் மாலிருஞ்சோலையதே (1)

கஞ்சனும் காளியனும்⋆ களிறும் மருதும் எருதும்⋆
வஞ்சனையில் மடிய⋆ வளர்ந்த மணிவண்ணன் மலை⋆
நஞ்சுமிழ் நாகம் எழுந்தணவி⋆ நளிர் மா மதியை⋆
செஞ்சுடர் நா வளைக்கும்⋆ திருமாலிருஞ்சோலையதே (2)

மன்னு நரகன் தன்னைச்⋆ சூழ் போகி வளைத்தெறிந்து⋆
கன்னி மகளிர் தம்மைக்⋆ கவர்ந்த கடல் வண்ணன் மலை⋆
புன்னை செருந்தியொடு⋆ புன வேங்கையும் கோங்கும் நின்று⋆
பொன் அரி மாலைகள் சூழ்⋆ பொழில் மாலிருஞ்சோலையதே (3)

மாவலி தன்னுடைய⋆ மகன் வாணன் மகள் இருந்த⋆
காவலைக் கட்டழித்த⋆ தனிக் காளை கருதும் மலை⋆
கோவலர் கோவிந்தனைக்⋆ குற மாதர்கள் பண் குறிஞ்சிப்⋆
பா ஒலி பாடி நடம் பயில்⋆ மாலிருஞ்சோலையதே (4)

‡பல பல நாழம் சொல்லிப்⋆ பழித்த சிசுபாலன் தன்னை⋆
அலவலைமை தவிர்த்த⋆ அழகன் அலங்காரன் மலை⋆
குல மலை கோல மலை⋆ குளிர் மா மலை கொற்ற மலை⋆
நில மலை நீண்ட மலை⋆ திருமாலிருஞ்சோலையதே (5)

பாண்டவர் தம்முடைய⋆ பாஞ்சாலி மறுக்கம் எல்லாம்⋆
ஆண்டங்கு நூற்றுவர் தம்⋆ பெண்டிர் மேல் வைத்த அப்பன் மலை⋆
பாண் தகு வண்டினங்கள்⋆ பண்கள் பாடி மதுப் பருகத்⋆
தோண்டல் உடைய மலை⋆ தொல்லை மாலிருஞ்சோலையதே (6)

கனங்குழையாள் பொருட்டாக்⋆ கணை பாரித்து⋆ அரக்கர் தங்கள்
இனம் கழுவேற்றுவித்த⋆ எழில் தோள் எம் இராமன் மலை⋆
கனம் கொழி தெள் அருவி⋆ வந்து சூழ்ந்தகல் ஞாலம் எல்லாம்⋆
இனம் குழுவாடும் மலை⋆ எழில் மாலிருஞ்சோலையதே (7)

எரி சிதறும் சரத்தால்⋆ இலங்கையினை⋆ தன்னுடைய
வரி சிலை வாயில் பெய்து⋆ வாய்க் கோட்டம் தவிர்த்துகந்த⋆
அரையன் அமரும் மலை⋆ அமரரொடு கோனும் சென்று⋆
திரிசுடர் சூழும் மலை⋆ திரு மாலிருஞ்சோலையதே (8)

கோட்டுமண் கொண்டிடந்து⋆ குடங்கையில் மண் கொண்டளந்து⋆
மீட்டும் அதுண்டுமிழ்ந்து⋆ விளையாடு விமலன் மலை⋆
ஈட்டிய பல் பொருள்கள்⋆ எம்பிரானுக்கடியுறை என்று⋆
ஓட்டரும் தண் சிலம்பாறுடை⋆ மாலிருஞ்சோலையதே (9)

‡ஆயிரம் தோள் பரப்பி⋆ முடி ஆயிரம் மின் இலக⋆
ஆயிரம் பைந்தலைய⋆ அனந்த சயனன் ஆளும் மலை⋆
ஆயிரம் ஆறுகளும்⋆ சுனைகள் பல ஆயிரமும்⋆
ஆயிரம் பூம் பொழிலும் உடை⋆ மாலிருஞ்சோலையதே (10)

‡மாலிருஞ்சோலை என்னும்⋆ மலையை உடைய மலையை⋆
நாலிரு மூர்த்தி தன்னை⋆ நால் வேதக் கடல் அமுதை⋆
மேல் இருங்கற்பகத்தை⋆ வேதாந்த விழுப் பொருளின்⋆
மேல் இருந்த விளக்கை⋆ விட்டுசித்தன் விரித்தனனே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥